தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,சென்னை–06
பிறப்பிப்பவர் : முனைவர் க. அறிவொளி,

ந.க.எண். 8095/டபிள்யு3/இ3/2023 நாள். 18.07.2023

பொருள்– பள்ளிக் கல்வி – மேல்நிலைக் கல்வி – கணினி பயிற்றுநர் நிலை–1 – பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டமை – கணினி பயிற்றுநர் நிலை–II ஆக பணிபுரிபவர்கள் – கணினி பயிற்றுநர் நிலை–1 ஆக நிலை உயர்த்தியது மீதமுள்ள தகுதிவாய்ந்த கணினி பயிற்றுநர் நிலை–II ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் தயாரித்தல் – தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விவரங்கள் கோருதல் – சார்ந்து.

பார்வை–

1. அரசாணை(நிலை) எண்.26, பள்ளிக் கல்வி (ப.க7(1)) துறை, நாள்.12.02.2019
2. அரசுக் கடித எண்.735/ப.க.7(1)/2020–1, நாள்.20.01.2020, 05.11.2020
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(தொழிற்கல்வி) ந.க.எண்.8095/வி1/இ2/2019, நாள்.27.06.2019, 21.01.2020 மற்றும் 25.02.2020
4. அரசாணை எண்.103, பள்ளிக் கல்வித் துறை, நாள்.05.11.2020
5. அரசாணை (நிலை)எண்.107, பள்ளிக் கல்வித் துறை, நாள்.17.11.2020
6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணைஇயக்குநர் (தொழிற்கல்வி) 8095/வி1/இ2/2019, நாள்.02.09.2020, 18.11.2020 மற்றும் 10.01.2022

•••

பார்வை 1–ல் காணும் அரசாணையின் மூலம் பள்ளிக் கல்வித் துறையில் ஏற்கனவே அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட 2689 கணினி பயிற்றுநர்கள் பணியிடங்களில் காலியாக உள்ள 814 பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் கணினி பயிற்றுநர் நிலை–1 பணியிடங்களாக நியமிக்கப்பட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், கணினி பயிற்றுநராக பணிபுரிபவர்களை கணினி பயிற்றுநர் நிலை–1 ஆக பணியிடங்கள் தரம் உயர்த்திட பார்வை 3ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி தகுதி வாய்ந்த கணினி பயிற்றுநர் நிலை–2 இல் பணிபுரியும் ஆசிரியர்கள் சார்பாக பட்டியல்கோரி பெறப்பட்டு பார்வை (6) இல் காண் செயல்முறைகள் வாயிலாக கணினி பயிற்றுநர் நிலை–1ஆக நிலை உயர்த்தி ஆணையிடப்பட்டது.

பார்வை 4–ல் காண் அரசாணையில் கணினி பயிற்றுநர் நிலை–1ல் உள்ளவர்கள் 8 ஆண்டுகள் பணி முடித்து இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை தளர்வளித்து அரசால் ஆணையிடப்பட்டது.

தற்போது பல மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் இருந்து கணினி பயிற்றுநர் நிலை–II பணியிடங்கள் கணினி பயிற்றுநர் நிலை–1ஆக நிலை உயர்த்துவது சார்பாக கருத்துருக்கள் பெறப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் பார்வை 1-ல் குறித்துள்ள அரசாணையில் கணினி பயிற்றுநர் நிலை-1 ஆக (Post Graduate Cadre) (with the minimum educational qualifications based on NCTE norms) நிலை உயர்த்துதல் மூலம் பூர்த்தி செய்திட பார்வை 1-ல் காண் அரசாணையில் பத்தி 1-ல் தெரிவிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். கணினி பயிற்றுநர் நிலை-1 பணியிடங்களுக்கு ரூ.9300-34800+4800 த.ஊ (Pre-Revised Scale) (Level 18. Rs.36900-1,16,600/-) (Revised Scale) என்ற ஊதிய ஏற்ற முறையில் ஊதியம்பெற ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியின் அடிப்படையில் கீழ்க்காணும் கல்வித் தகுதிகள் (கணினி பயிற்றுநர் நிலை-1ஆக நிலை உயர்த்திட) பெற்றிருக்க வேண்டும்.

a) Post Graduate with at least 50% marks (or its equivalent) from recognized University and Bachelor of Education (B.Ed.,) from National Council for Teacher Education recognized institution.

(or)

b) Post Graduate with at least 45% marks (or its equivalent) from recognized University and Bachelor of Education (B.Ed.,) from NCTE recognized institution (in accordance with the National Council for Teacher Education (Form of application for recognition, the time limit of submission of application, Determination of norms and standards for recognition of teacher education programmes and permission to start new course of training) Regulations, 2002 notified on 13.11.2002 and National Council for Teacher Education (Recognition Norms and Procedure) Regulations, 2007 notified on 10.12.2007

(or)

c) Post Graduate with at least 50% marks (or its equivalent) from recognized University and B.A., Ed/B.Sc., Ed, from any NCTE recognized institution.

The above NCTE norms to be followed with the below mentioned relevant subjects.

i. Master's Degree in Engineering or Technology in computer Science/ M.Tech Degree in Computer Science/ Computer Engineering/ Information Technology/ Software Engineering from recognized University or its equivalent.

ii. Master's Degree in Computer Application/ Master's Degree in Computer Science or information Technology from recognized University or its equivalent.

and

B.Ed., B.A., Ed., / B.Sc., E.d., by recognized University or its equivalent.

எனவே, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தகுதிகாண் பருவம் முடித்த கணினி பயிற்றுநர் நிலை–2–ல் பணிபுரிபவர்களை அவர்கள் பெற்றிருக்கும் கல்வித் தகுதியின் அடிப்படையில் அனைத்து அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிபவர்களிடமிருந்து சுயவிவரம் அடங்கிய கருத்துருக்களை பெற்று அவற்றை மாவட்ட அளவில் தொகுத்து ஒவ்வொரு கல்விச் சான்றின் நகலிலும் சரிபார்த்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் மேலொப்பம் இட வேண்டும்.

கணினி பயிற்றுநர் நிலை–1க்கான நிலை உயர்த்துதலுக்கு தகுதிவாய்ந்த கணினி பயிற்றுநர் நிலை–2ல் பணிபுரியும் நபர்களின் பெயர்களை பட்டியலில் சேர்க்கும்போது கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனத்தில் கொண்டு விவரங்களை சரிபார்த்து பட்டியல் தயார் செய்யும்படி அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. பட்டியலில் இடம் பெறும் கணினி பயிற்றுநர்கள் (நிலை–2) தகுதிகாண் பருவம் முடித்த மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு NCTE–2014 Norms–ன்படி முதுகலை(கணினி அறிவியல்) பட்டப்படிப்பும், B.Ed., பட்டப்படிப்பும் முடித்திருத்தல் வேண்டும்.

2. வெளிமாநில சான்று எனில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். (நகல் இணைக்கப்பட வேண்டும்)

3. ஆசிரியர் தேர்வு வாரியம் சிறப்புத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டவர்கள் சார்ந்த விவரங்களை அளிக்கையில் அவரவர் தேர்வு செய்யப்பட்ட ஆண்டு மற்றும் தர எண் ஆகியவற்றை (Year of Recruitment and rank no) தவறாமல் குறிப்பிட வேண்டும். (நியமன ஆணையின் நகல் படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்)

4. இளங்கலை பட்டத்தில் இரட்டைப் படிப்பு (Double Degree) மற்றும் Simultaneous degree படித்தவர்களின் பெயர்களை கண்டிப்பாக பட்டியலில் சேர்க்கக் கூடாது.

5. 10+2+3 மற்றும் முதுகலைப் பட்டத்துடன் (கணினி அறிவியல்) B.Ed, கல்வித் தகுதிகள் முறைப்படி வரிசைக்கிரமமாக பெற்றவர்களின் பெயர்களை மட்டுமே பட்டியலில் சேர்க்க வேண்டும்.

6. துறை மாறுதல் அலகு விட்டு அலகு மாறுதல் மற்றும் பணியேற்றவர்களின் பெயர்களை அவர்கள் பள்ளிக் கல்வித் துறையில் பணியேற்ற நாளினை அடிப்படையாகக் கொண்டு பட்டியலில் சேர்க்க வேண்டும்.

7. ஆசிரியர்களின் பிறந்த தேதி, நியமன முறை, கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெற்றிருப்பின் அதன் விவரம், ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருப்பின் அதன் விவரம் 17(a) அல்லது 17(b) போன்றவற்றில் உள்ள நடவடிக்கைகளில் உறுதி செய்து சரியாக அளிக்க வேண்டும்.

8. தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி எண்.17(b)–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள கணினி பயிற்றுநர் நிலை–2 ஆகப் பணிபுரிபவர்களை கணினி பயிற்றுநர் நிலை–1க்கான நிலை உயர்த்துதலுக்கு பரிந்துரைக்கக் கூடாது.

9. தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி எண்.17(a)–ன் கீழ் நடவடிக்கை மேற்கொளளப்பட்டு தண்டனை பெற்று தண்டனை காலம் முடிவடையாத கணினி பயிற்றுநர் நிலை–2 ஆக பணிபுரிபவர்களை கணினி பயிற்றுநர் நிலை–1 ஆக நிலை உயர்த்துதலுக்கு பரிந்துரைக்கக் கூடாது.

10. தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மற்றும் தண்டனை பெற்றுள்ள கணினி பயிற்றுநர் நிலை–2 ஆசிரியர்களை, கணினி பயிற்றுநர் நிலை–1க்கான நிலை உயர்த்துதலுக்கு பரிந்துரைக்கப்படும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் அது சார்ந்த பணியினை மேற்கொள்ளும் அலுவலகப் பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. பெயர்ப்பட்டியலில் சேர்க்கப்படும் கணினி பயிற்றுநர்கள் சார்பான கீழ்க்கண்ட சான்றுகளின் நகல்களை பெற்று சரிபார்த்து முதன்மைக் கல்வி அலுவலரின் மேலோப்பத்துடன் சார்ந்த ஆசிரியரின் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும்.

- நியமன ஆணையின் நகல் (பணிப்பதிவேடு பதிவு உட்பட)
- பணிவரன்முறை ஆணையின் நகல் (பணிப்பதிவேடு பதிவு உட்பட)
- தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட ஆணையின் நகல் (பணிப்பதிவேடு பதிவு உட்பட)
- 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்களின் நகல்கள் (பணிப்பதிவேடு பதிவு உட்பட)
- 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்களின் உண்மைத் தன்மை சார்ந்த நகல்கள் (பணிப்பதிவேடு பதிவு உட்பட)
- இளங்கலை பட்டம், முதுகலைப் பட்டம் மற்றும் பி.எட் பட்ட சான்றுகளின் நகல்கள் மற்றும் ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல்களின் நகல்கள் (Consolidated Mark Sheet) இணைக்கப்பட வேண்டும். (அவற்றில் பத்தி 2ல் குறித்தவாறு குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்)
- இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பிற்கு இணைத்தன்மை (Equivalency) பெற்ற அரசாணை விவரம் கண்டிப்பாக இணைக்க வேண்டும்
- சில பாடங்களில் தொடர்புடைய பட்டங்கள் (Degree) பெறாத நிலையில் அப்பாடங்களுக்கான இணைத்தன்மை (Equivalency) அரசாணை நகல் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். இணைத்தன்மை இல்லாவிடில் கண்டிப்பாக பட்டியலில் சேர்க்கக் கூடாது.

அந்தந்த மாவட்டத்தில் 8 ஆண்டுகள் பணி முடித்து இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்காக இதுவரை முதன்மைக் கல்வி அலுவலர்களால் பரிந்துரை செய்யப்படாத தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்ற நிலை–1 நிலை உயர்த்துதலுக்கு தகுதி வாய்ந்த நபர்களின் பெயர்ப் பட்டியல் தயாரித்து தொகுக்கப்பட்டு, இந்த தொகுப்பு பட்டியலின் கீழ் இடம்பெற்றுள்ள கணினி பயிற்றுநர்கள் நிலை– 2 தவிர வேறு எந்த நபர்களின் பெயர்களும் விடுபடவில்லை என முதன்மைக் கல்வி அலுவலரால் சான்று அளிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தகுதிவாய்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயார் செய்யும்போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அரசுக்கு அனுப்ப ஏதுவாக தனித்தனியாக முதன்மைக் கல்வி அலுவலரின் மேலொப்பத்துடன் அனுப்பி வைக்குமாறும் அப்படிவங்களைத் தொகுத்து MS–Excel Format–ல் மருதம் Font –ல் தயார் செய்து குறுந்தகட்டில் பதிவு செய்து 23.07.2023க்குள் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

இணைப்பு– படிவம் 1 மற்றும் 2

**பள்ளிக் கல்வி இயக்குநருக்காக**

18/7/2023

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,